# காமராஜரின் பன்முக ஆளுமை



பதிப்பாசிரியர்

**முனைவர் கா.ஸ்ரீதர்**

வி.இ.நா. செந்திக்குமார நாடார் கல்லூரி (தன்னாட்சி)
(தேசிய தர மதிப்பீட்டில் 'A' தரம் பெற்றது)
விருதுநகர்

Scanned by CamScanner

110
31. சோ.முத்தமிழ்ச்செல்வன்
அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி 118
32. D.ஜெமிலா மார்ஷல்
மார்கிரிகோரியஸ் கல்லூரி 125
33. ச.முருகேசன்
அழகப்பா அரசு கலைக்கல்லூரி 131
34. சி. சொர்ணமாலா
பாத்திமா கல்லூரி 136
35. சு.மகேஷ் பிரியா
வி.இ.நா.செ.நா.கல்லூரி 140
36. ரா. மோகன்ராஜ்
விவேகானந்தர் கல்லூரி 145
37. அ.ஜெம்சி அசும்தா
வி.இ.நா.செ.நா.கல்லூரி 150
38. மெர்ஷி ஏஞ்சலா
பாத்திமா கல்லூரி 155
39. செ.துர்காதேவி
வி.இ.நா.செ.நா.கல்லூரி 159
40. அர.சுதா
இரத்தினம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
41. மு.முகமது யாசர் அராபத் 164
வி.இ.நா.செ.நா.கல்லூரி
42. எஸ்.மஹாலட்சுமி 169
வி.இ.நா.செ.நா.கல்லூரி
43. ஜோ. சகாய பவுலின் 174
பாத்திமா கல்லூரி
44. இரா.லதா 179
இ.ம.கோ.யாதவா மகளிர் கல்லூரி
45. லெ.அலமேலு 185
ஏ.வி.ச.கல்லூரி
46. மு.தமிழ்ச்செல்வி 191
இ.மா.கோ.யாதவர் மகளிர் கல்லூரி

Scanned by CamScanner

# 43. பாமரனின் மகத்தான கல்வித் தொண்டு

ஜோ. சகாய பவுலின்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பாத்திமா கல்லூரி,
மதுரை

**முன்னுரை :**

முத்திரைப் பதிக்க முகவரி தேவையில்லை, தென்னாட்டின் கருப்பு காந்தி, பெரியாருக்குப் பச்சைத் தமிழர், பெரும்பாலோருக்குப் படிக்காத மேதை கடமையில் கர்ம வீரர் கடிகாரம் அணியாத காலக் கணிகர் இவை அனைத்தும் காமராசரின் புனைப்பெயர் அல்ல, அவரின் புகழால் கிடைத்த பெயர்கள். படிக்காத மாமேதை, தம்முடைய பட்டறிவால் மட்டுமே வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுத் தேர்ந்தவர். தான் படிக்காத கல்வியை தன்னுடைய தமிழக மக்கள் பெற வேண்டும் என்பதில் தீவிரம் காட்டியவர். கல்வி புகட்ட கல்விக்கூடத்தின் பங்கு மாத்திரம் போதாது, பிற துறைகளும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று திட்டமிட்டு, திட்டங்கள் பல கொணர்ந்தவர். திட்டம் இட்டது மட்டும் அல்லாது அதனை செயல்நிலைப்படுத்தி பல படித்த மேதைகளை உருவாக்கிய படிக்காத மேதை கர்ம வீரர் காமராசரின் மகத்தான கல்வித் தொண்டினைப் பற்றி விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**இலவசக்கல்வி :**

கல்வி கற்க பல தடைகள் தோன்றினும் முதன்மையான தடைக்கல்லாகத் திகழ்வது வறுமையே என்பதை நன்குணர்ந்தவர் காமராசர். முதலில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த எல்லா இலவசக் கல்விச் சலுகையும், பின்பு மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள மாணவர்களுக்கும் அளித்தார். அதே போன்று தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்து பின் கிறிஸ்தவ சமயத்திற்கு மதம் மாறியவர்களுக்கு 1957-58இல் காமராசர் அரசின் மூலம் இலவச கல்வி அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் மேலும் பலர் இலவசக் கல்வி உட்பட பல சலுகைகள் பெற்றனர். பின்பு ஆண்டு வருமானம் ரூ.12.00 உள் இருக்கக்கூடிய குடும்பத்தில் உள்ள ஏழை மாணாக்கர்களுக்கு, உயர்கல்வி வரை இலவசக்கல்வி என்ற திட்டத்தை 1960இல் கொண்டு வந்தார். அத்திட்டத்தின் கீழ் 1962இல் அனைவருக்கும் உயர்நிலைப் பள்ளி வரை இலவச கல்வி வழங்கப்பட்டது. இலவசம் மூலம் நம் உரிமைகளை இழந்து வரும் இச்சூழலில், கல்வியை இலவசமாக வழங்கிய உன்னத மனிதர் காமராசர்

Scanned by CamScanner